**2023 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு நகர் மன்றக் கூட்டத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல்.**

**முன்னிலை : திருமதி. ஆர். ஜானகி.**

## பொருள் எண்.1

சத்தியமங்கலம் நகராட்சியில் ஆணையாளராக பணிபுரிந்து வரும் திரு.வ. செல்வம் அவர்களது ஆகஸ்ட்-2023 ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.986/2023/சி1)

## பொருள் எண். 2

தமிழக முதலமைச்சர் அவர்களின் சீர்மிகு ஆளுமை திட்டத்தின் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர், சென்னை அவர்களது கடித ந.க.எண். 3088/2022/தூ.இ.தி. நாள்:23.02.2023-ன் படி சத்தியமங்கலம் நகராட்சியில் தயாரிக்கப்படும் இயற்கை உரம் "செழிப்பு" என்ற பெயரில் அச்சிட்ட 5 கிலோ கைப்பை மூலம் உர விற்பனை செய்திட அதற்கான தோராய செலவினம் ரூ.15,000/-க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1607/2023/எச் 1)

## பொருள் எண். 3

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களது ந.க.எண்.681/2022/பி1 நாள் : 21.04.2023-ன் படி சத்தியமங்கலம் நகராட்சி பகுதிகளில் திருமதி.வெ. விமலா வெங்கடாஜலபதி, நாடக சபா குழுவின் மூலம் மக்கும் குப்பை, மக்காத குப்பை, பிளாஸ்டிக் ஒழிப்பு, வீட்டுக்கொரு கழிவறை, டெங்கு காய்ச்சல், மழைநீர் சேகரிப்பு போன்றவற்றிற்கான விழிப்புணர்வுகளை பொது மக்கள் மத்தியில் கலைநிகழ்ச்சிகள் நடத்திட, அதற்கான கலை நிகழ்ச்சி ஒன்றுக்கு ரூ.7,500/- என்ற வீதம், 3 கலை நிகழ்ச்சிகளுக்கு ரூ.22,500/- ஆகும். எனவே, அதற்கான செலவினத்திற்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1606/2023/ எச் 1)

## பொருள் எண். 4

சத்தியமங்கலம் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவுகள் அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்படும் TN36AM5877 வாகனங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுது நீக்கி மற்றும் பராமரிப்பு செய்து, தகுதி சான்று பெற்று தரும் பணிக்கு 09.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளிகள் தொகை |
|---|---|---|
| 1. | ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார்ஸ் ஒர்க்ஸ் | ரூ.39,000/- |
| 2. | முருகன் ஆட்டோஸ் | ரூ. 43,000/- |

மேற்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் கண்டுள்ள ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார்ஸ் ஒர்க்ஸ் கருங்கல்பாளையம், ஈரோடு என்ற நிறுவனம் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரித்தல்.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1451 / 2023 / எச் 1)

## பொருள் எண். 5

சத்தியமங்கலம் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவுகள் அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்படும் TN36AM5808 வாகனங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுது நீக்கி மற்றும் பராமரிப்பு செய்து, தகுதி சான்று பெற்று தரும் பணிக்கு 09.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளிகள் தொகை |
|---|---|---|
| 1. | ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார்ஸ் ஒர்க்ஸ் | ரூ.39,500/- |
| 2. | முருகன் ஆட்டோஸ் | ரூ. 43,000/- |

மேற்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் கண்டுள்ள ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார்ஸ் ஒர்க்ஸ் கருங்கல்பாளையம், ஈரோடு என்ற நிறுவனம் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரித்தல்.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(க.எண். 1450/ 2023/ எச் 1)

## பொருள் எண். 6

சத்தியமங்கலம் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் உள்ள 27 வார்டுகளில் தினந்தோறும் உருவாகும் மறுசுழற்சி செய்ய இயலாத மக்காத பிளாஸ்டிக் கழிவுகளை அரியலூரில் அமைந்துள்ள டால்மியா மற்றும் அல்ட்ராடெக் சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு பிளாஸ்டிக் கழிவுகளை கொண்டு செல்ல தனியார் நிறுவனமான லாரிகள் மூலம் வாடகை அடிப்படையில் அமைத்து கொள்ள 10.08.2023 மின்னஞ்சல் வாயிலாக இரு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்க்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளிகள் தொகை |
|---|---|---|
| 1. | R.ஆறுமுகம், காண்ட்ராக்டர், சத்தியமங்கலம். | ரூ.25,000/- per load |
| 2. | தங்கவேல், வினோ கன்ஸ்ட்ரக்ஷன், பவானிசாகர், சத்தியமங்கலம். | ரூ. 22,400/- per load |

மேற்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் கண்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரர் தங்கவேல், வினோ கன்ஸ்ட்ரக்ஷன், பவானிசாகர், சத்தியமங்கலம் மன்றம் அங்கீகரிக்கலாம்.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(க.எண். 530/2023/எச்1)

**பொருள் எண்.7**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் அலுவலக தொலைபேசி அறிவுரை நாள் 19.08.2023-ன் படி சத்தியமங்கலம் நகராட்சி பகுதிகளில் சேகரிக்கப்படும் மக்கும் கழிவுகளை கொண்டு தயாரிக்கப்படும் உரத்தில் உள்ள ஊட்டச்சத்தின் அளவுகளை வேளாண்மை பொறியியல் கல்லூரி மூலம் ஆய்வு செய்து சான்றிதழ் பெற அறிவித்துள்ளார். எனவே இந்நகராட்சியில் அமைந்துள்ள அத்தாணி ரோடு MCC-2 மற்றும் கோட்டுவீராம் பாளையம் திருவள்ளுவர் திடல் MCC-1 ஆகிய 3 நுண்ணுயிர் கூடங்களில் தயாரிக்கப்படும் உரத்தில் உள்ள ஊட்டச்சத்தின் அளவுகளை ஆய்வு செய்து சான்றிதழ் பெற வேளாண்மை பொறியியல் கல்லூரியில் சான்று பெறுவதற்கான தோராய செலவினம் தொகை ரூபாய். 30,000/- த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்..

(க.எண்.1788/2023/எச்1)

**பொருள் எண்.8**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் ஒப்பந்த பணியாளர்களாக பணிபுரியும் பணியாளர்கள் தங்களை பணி நிரந்தரம் செய்ய கேட்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் கீழ்கண்டவாறு 14 நபர்கள் தனித்தனியாக (சென்னை உயர்நீதிமன்றத்தில்) வழக்கு தொடர்ந்துள்ளனர். இவ்வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் அரசு வழக்கறிஞர் B.ஆனந்த் என்பவர் வழக்கில் ஆஜராகி அதனை தள்ளுபடி செய்து வழங்கியுள்ளார். எனவே மேற்கண்ட 14 வழக்குகளுக்கும் ரூ. 15000/- வீதம் 2,10,000/- வழங்க கேட்டு தனது 9.8.2023 ம் தேதியில் கடிதம் வழங்கியுள்ளார்.

| | | |
|---|---|---|
| 1 | K.சதீஷ்குமார் | W.P.NO.23295/2023 |
| 2 | R.லோகநாதன் | W.P.NO.23296/2023 |
| 3 | N.சிவகுமார் | W.P.NO.23298/2023 |
| 4 | K.முத்துக்குமார் | W.P.NO.23303/2023 |
| 5 | D.பத்ரன் | W.P.NO.23252/2023 |
| 6 | P.காந்தி | W.P.NO.23258/2023 |
| 7 | S.P.சுப்பிரமணியன் | W.P.NO.23255/2023 |

| | | |
|---|---|---|
| 8 | M.ஹரிநாராயணன் | W.P.NO.23254/2023 |
| 9 | A.ராஜன் | W.P.NO.23250/2023 |
| 10 | S.காளிமுத்து | W.P.NO.23293/2023 |
| 11 | P.பண்ணாரி | W.P.NO.23442/2023 |
| 12 | ரங்கசாமி | W.P.NO.23444/2023 |
| 13 | S.குப்புராஜ் | W.P.NO.23448/2023 |
| 14 | V.முருகன் | W.P.NO.23451/2023 |

மேற்கண்ட 14 நபர்களுக்கான வழக்கை முடித்தமைக்கான ரூ.2,10,000/-அரசு வழக்கறிஞருக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு :-

அனுமதிக்கலாம்.

(க.எண். 551/ 2021/ எச் 1)

**பொருள் எண். 9**

சத்தியமங்கலம் நகராட்சியில் துப்புரவு பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்து வந்த திரு.எம்.சத்தியநாராயணன் என்பவர் தனது ஓய்வூதிய பலன்களில் உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை, சென்னை அவர்களின் பிடித்தம் செய்யப்பட்ட ரூ.1,82,782/- ஐ வழங்க கேட்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.No.10467/2022- ன்படி வழக்கு தொடர்ந்திருந்தார். மேற்கண்ட வழக்கில் எம்.சத்தியநாராயணன் என்பவருக்கு நீதிமன்ற மூலமாக அவரிடம் பிடித்தம் செய்யப்பட்ட ரூ.1,82,782/- வுடன் 12% வட்டியை சேர்த்து நான்கு வார காலத்திற்குள் தொகையை வழங்கப்பட வேண்டும் என்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இதன்மீது மேல்முறையீடு செய்யலாமா அல்லது தொகையை திரும்ப வழங்கலாமா என்பது குறித்து சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் B.ஆனந்த் என்பவரிடம் Legal Opinion வழங்க கேட்டு கடிதம் அனுப்பப்பட்டது. எனவே, இதன்மீது மேல்முறையீடு செய்ய வழிவகை இல்லை என்றும் தனது Legal Opinion வழங்கியுள்ளார். எனவே அதற்கான கட்டணம் ரூ.5,000/- வழங்க கேட்டு உள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

திரு.B.ஆனந்த், அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு W.P.No.10467/2022 –க்கான Legal Opinion வழங்கியமைக்கு கட்டணமாக ரூ. 5,000/- வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 589 / 2023/ சி1)

**பொருள் எண். 10**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட கடைகளுக்கு 17.08.2023 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில், புதிய பேருந்து நிலைய கடை எண்.48 க்கு ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை. இந்நிலையில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் திரு.V.கேசவன்,

சத்தியமங்கலம் என்பவர் வாடகைத் தொகையாக ரூ.5,250/-க்கு கோரியுள்ளார். பழைய வாடகை ரூ-13,357/- ஆகும். அவர் கோரியுள்ள வாடகை ரூ.5,250/- ஆகும். எனவே, இது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

அலுவலக குறிப்பு:

பழைய வாடகை தொகையை விட குறைவாக உள்ளதாலும் நகராட்சியின் நிதி இழப்பினை கருத்தில் கொண்டு மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண். 1200 /2023/ எ3)

## பொருள் எண். 11

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட கடைகளுக்கு 17.08.2023 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில், பழைய பேருந்து நிலைய மேல்தள கடை எண்.21 க்கு திரு.V.கேசவன், சத்தியமங்கலம் என்பவர் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வழங்கியுள்ளார். மேலும், இக்கடைக்கு பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. எனவே, வாடகைத் தொகை ரூ.4,250/- க்கு கோரியுள்ளார். இத்தொகை சந்தை மதிப்பீட்டை விட குறைவாகவும், பொதுப்பணி மதிப்பீட்டை விட குறைவாகவும், குழு மதிப்பீட்டை விட குறைவாகவும் உள்ளது. மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

இக்கடை சுமார் 28 முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்து கொள்ளவில்லை. இந்நிலையில் இக்கடை மேல்தளமாக உள்ளதால் நகராட்சியின் நிதி இழப்பினை கருத்தில் கொண்டு திரு.V.கேசவன், சத்தியமங்கலம் என்பவர் கோரியுள்ள வாடகைத் தொகைக்கு வழங்குவது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண். 1200 /2023/ எ3)

## பொருள் எண். 12

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட கடைகளுக்கு 08.08.2023 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் வாரச்சந்தை கடை எண்.33-க்கு திரு.S.லோகநாதன், சத்தியமங்கலம் என்பவர் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வழங்கி இருந்தார். அதில் வாடகைத் தொகையாக ரூ.9,000/- க்கு கோரி இருந்தார். இந்நிலையில் 18.08.2023ம் தேதி அன்று எனது குடும்ப சூழ்நிலை காரணமாக கடையை நடத்த இயலவில்லை என்றும், நான் செலுத்திய வைப்புத் தொகையை திரும்ப வழங்குமாறும் கேட்டு மனு செய்துள்ளார். எனவே, மேற்படி மனுவை ஏற்று மறு ஏலம் கொண்டுவர மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

திரு.S.லோகநாதன், சத்தியமங்கலம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்து மறு ஏலம் கொண்டு வரவும், அவர் வழங்கி உள்ள வைப்புத் தொகையை திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1200 /2023/ எ3)

**பொருள் எண். 13**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட கடைகளுக்கு 17.08.2023 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பழைய பேருந்து நிலைய கடை எண்.22 க்கு பொது ஏலத்தில் கலந்து கொள்ள ஒருவரும் முன்வரவில்லை. இந்நிலையில் திரு.B.K.தங்கவேல், நம்பியூர் என்பவர் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வழங்கி இருந்தார். அதில் வாடகைத் தொகையாக ரூ.5,700/- கேட்டுள்ளார்.. மேலும் இதன் சந்தை மதிப்பு ரூ.5,570/- ஆகும். பொதுப்பணித்துறை மதிப்பீடு ரூ.7,150/- ஆகும். குழு நிர்ணய மதிப்பீடு ரூ.9,000/- ஆகும். எனவே, சந்தை மதிப்பீட்டை விட கூடுதலாகவும், குழு மதிப்பீட்டை விட குறைவாக உள்ளது. மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண். 1200 /2023/ எ3)

**பொருள் எண். 14**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட கடைகளுக்கு 17.08.2023 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், சத்திரக் கடை எண்.20-க்கு பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. இந்நிலையில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி திரு.P.பொன்னுசாமி, கிழக்கு வீதி, சத்தியமங்கலம் என்பவர் வாடகைத் தொகையாக ரூ.3,200/- க்கு கோரியுள்ளார். மேலும் அதன் சந்தை மதிப்பு ரூ.3,200/- ஆகும். பொதுப்பணித்துறை மதிப்பு ரூ.4,620/- ஆகும். குழு மதிப்பு ரூ.6,000/- ஆகும். எனவே, வாடகைத் தொகை சந்தை மதிப்பீட்டு தொகைக்கு சரியாக உள்ளது. குழு மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக உள்ளது. மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண். 1200 /2023/ எ3)

**பொருள் எண். 15**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட கடைகளுக்கு 08.08.2023 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வாரச்சந்தை கடை எண்.21 க்கு கீழ்க்கண்ட மூன்று நபர்கள் பொது ஏலத்தில் கலந்து கொண்டனர்.

1. திரு. V.ரகுபதி, சத்தியமங்கலம் ரூ.14,500/-
2. திரு.R.சரவணன், சத்தியமங்கலம் ரூ.15,000/-
3. திரு.M. தினேஷ், அரியப்பம்பாளையம் ரூ.13,000/-

மேலும் இதற்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. கீழ்க்கண்டவாறு,

1. திரு. G. ஆறுமுகசாமி, சத்தியமங்கலம் ரூ.12,500/-
2. திரு.N. ரவிசங்கர், சத்தியமங்கலம் ரூ.26,000/-

மேற்கண்ட ஏலத்தொகையை விட ஒப்பந்தப்புள்ளி தொகை கூடுதலாக உள்ளதால் திரு.N.ரவிசங்கர், வடக்குப்பேட்டை, சத்தியமங்கலம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

ஏலத்தொகையை விட ஒப்பந்தப்புள்ளி தொகை அதிகமாக உள்ளதால் திரு. N. ரவிசங்கர், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

(ந.க.எண். 1200 /2023/ எ3)

## பொருள் எண். 16

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட கடைகளுக்கு 17.08.2023 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில், பொது ஏலத்தில் பழைய பேருந்து நிலைய கடை எண். 26 க்கு ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. அதற்கு திரு.P.சுப்பிரமணி, கோணமூலை, சத்தியமங்கலம்-2 என்பவர் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வழங்கி இருந்தார். மேலும், அதில் வாடகைத் தொகையாக ரூ.6,150/-கேட்டுள்ளார். இதன் சந்தை மதிப்பு ரூ.5,570/- ஆகும். பொதுப்பணித்துறை மதிப்பு ரூ.7,150/- ஆகும். குழு மதிப்பு ரூ.9,000/- ஆகும். எனவே, சந்தை மதிப்பீட்டை விட அதிகமாகவும், குழு மதிப்பீட்டை விட குறைவாகவும் உள்ளதால் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

இக்கடையை 28 முறை ஏலம் விடப்பட்டு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் ஒருவரும் கலந்து கொள்ள முன்வராத நிலையில் நகராட்சியின் நிதி இழப்பை கருத்தில் கொண்டு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.P.சுப்பிரமணி, 310, அண்ணாநகர், சத்தியமங்கலம்-2 என்பவர் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

(ந.க.எண். 1200 /2023/ எ3)

## பொருள் எண். 17

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட கடைகளுக்கு 08.08.2023 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. இந்நிலையில் திரு.V.பெரியசாமி, சத்தியமங்கலம்-2 என்பவர் வாரச்சந்தை கடை எண்.8-க்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் ரூ.11,000/- வழங்க கேட்டு வழங்கி

இருந்தார். இந்நிலையில் 09.08.2023 அன்று S.A.ஷேக்நவீத் என்பவர் கடை எண்.8 க்கு ஒப்பந்தபுள்ளி தொகையை விட 10% கூடுதலாக வைத்துக் கொள்வதாக கேட்டு வைப்புத் தொகை மற்றும் முன்வைப்புத் தொகை(12 மாத வாடகை) கூடுதலாக செலுத்தி மறு ஏலம் கொண்டு வர கேட்டிருந்தார். எனவே, மேற்படி கடைக்கு 17.08.2023 அன்று ஒப்பந்தபுள்ளி மற்றும் மறு ஏலம் கொண்டு வரப்பட்டது. அதில் கீழ்க்கண்ட மூன்று நபர்கள் கலந்து கொண்டனர்.

| | | |
|---|---|---|
| 1. | திரு. V.பெரியசாமி, சத்தியமங்கலம் | ரூ.12,800/- |
| 2. | திரு. தினேஷ் | ரூ.12,400/- |
| 3. | திரு.S.M. ஆறுமுகம், சத்தியமங்கலம் | ரூ.12,700/- |

மேற்கண்ட இவ்வினத்திற்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. S.A.ஷேக்நவீத், சத்தியமங்கலம் | ரூ.13,100/- |
| 2. | திரு. V.பெரியசாமி, சத்தியமங்கலம் | ரூ.12,500/- |

மேற்கண்ட ஏலத்தொகையை விட ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு. S.A.ஷேக்நவீத், சத்தியமங்கலம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.13,100/- பழைய வாடகையை விட கூடுதலாகவும் உள்ளதாலும், தற்பொழுது கேட்கப்பட்ட வாடகைத் தொகையை நிதி இழப்பினை கருத்தில் கொண்டு வழங்குவது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

அலுவலக குறிப்பு:

மன்றம் முடிவு செய்யலாம்.

(ந.க.எண். 1200 /2023/ எ3)

### பொருள் எண்.18

சென்னை உயர்நீதிமன்றத்தில் D.பங்கஜவள்ளி என்பவர் W.P.No.10556/2023 வழக்கு தொடர்ந்து, வழக்கு அவருக்கு சாதகமாக தீர்ப்பாணை வழங்கப்பட்டு வைப்புத் தொகை ரூ.90,265/- ஐ நான்கு வார காலத்திற்குள் மனுதாரருக்கு வழங்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிடப்பட்டது. மேற்படி வழக்கை மேல்முறையீடு செய்யலாமா அல்லது தொகையை வழங்கலாமா என்பது குறித்து சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு. B.ஆனந்த் அவர்கள் மூலமாக (Legal Opinion) கோரப்பட்டமைக்கு அதன்மீது மேல்முறையீடு செய்ய வழிவகை இல்லை என்றும், நான்கு வார காலத்திற்குள் தொகையை வழங்க வேண்டும் என்றும் அரசு வழக்கறிஞர் (Legal Opinion) வழங்கியுள்ளார். எனவே, அதற்கான கட்டணம் ரூ.5,000/- வழங்க கேட்டுள்ளார். அதன் விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு.B.ஆனந்த் அவர்களுக்கு W.P.No.10556/2023- க்கான Legal Opinion பெறப்பட்டமைக்கு கட்டணமாக ரூ.5,000/- வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 589 /2023/ சி1)

## பொருள் எண்.19

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட கடைகளுக்கு 08.08.2023 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், சத்திரக்கடை எண்.20-க்கு பொது ஏலத்தில் கலந்து கொள்ள ஒருவரும் முன்வரவில்லை. இந்நிலையில் P.பொன்னுசாமி, கிழக்கு வீதி, சத்தியமங்கலம் என்பவர் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி வழங்கி இருந்தார். அதனை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

சத்திரக்கடை எண்.20-க்கு P.பொன்னுசாமி, கிழக்கு வீதி, சத்தியமங்கலம் என்பவர் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி வாடகைத் தொகை ஏதும் குறிப்பிடாததால் அவ்வொப்பந்த புள்ளியை நிராகரிக்கலாம்.

(ந.க.எண்.1200/2023/எ3 )

## பொருள் எண்.20

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட கடைகளுக்கு 08.08.2023 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பழைய பேருந்து நிலைய கடை எண்.22 க்கு பொது ஏலத்தில் கலந்து கொள்ள ஒருவரும் முன்வரவில்லை. இந்நிலையில் திரு.B.K.தங்கவேல், நம்பியூர் என்பவர் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வழங்கி இருந்தார். அதனை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

பழைய பேருந்து நிலைய கடை எண்.22 க்கு திரு.B.K.தங்கவேல் என்பவர் வழங்கிய ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை வாடகைத் தொகை ஏதும் குறிப்பிடாததால் அவ்வொப்பந்த புள்ளியை நிராகரிக்கலாம்.

(ந.க.எண். 1200/2023/எ3)

## பொருள் எண்.21

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட நகர்புற ஆரம்ப சுகாதார மைய வளாகத்தில் புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்து குடிநீர் வசதிகள் செய்யும் பணிக்கு இந்நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டது. நகராட்சி பொறியாளர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 28.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1. | திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர். சத்தியமங்கலம். | ரூ,2,49,782/- | 0.67 சதவீத குறைவு. |
| 2. | திரு.சி.பி.கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர். சென்னிமலை. | ரூ,2,55,000/- | 2.09 சதவீத அதிகம். |

மேற்படி அட்டவணையின்படி குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க நகர் மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி ஏற்றமைக்கும் பணி ஆணை வழங்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கட்டு எண்.548 / 2022 / இ1)

**பொருள் எண். 22**

சத்தியமங்கலம் நகராட்சியின் நகர் மன்றத்தலைவர் அவர்களின் ஈப்பு வாகனம் TN36 BW 8889 11.08.2023 வரை உள்ள காலகட்டத்திற்கு வாகன காப்பீடு முடிவடைவதால், ஈப்பு வாகனத்திற்கு வாகன காப்பீடு புதுப்பித்து தருமாறு திரு.ப.ரங்கசாமி, ஓட்டுநர், சத்தியமங்கலம் நகராட்சி, தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். எனவே, TN36 BW 8889 வாகனத்திற்கு Own Damaged 11.08.2023 முதல் 10.08.2024 வரை உள்ள காலத்திற்கு வாகன காப்பீடு சந்தா தொகை ரூ.18,055/-ஐ UNITED INDIA INSURANCE COMPANY LTd நிறுவனத்திற்கு தொகை செலுத்த நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தப்பட்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கட்டு எண்.579/2022/இ1)

**பொருள் எண். 23**

சத்தியமங்கலம் நகராட்சியில் பவானி ஆற்று நீரை ஆதாரமாக கொண்டு இரண்டு தலைமை நீரேற்று நிலையங்கள் உள்ளன. ஒன்று ரங்கசமுத்திரம் 1966 ஆம் ஆண்டு மற்றொன்று கோம்புபள்ளம் 1996 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு நகராட்சி பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின்படி 37816 ஆகும். தற்பொழுது எதிர்வரும் ஆண்டுகளில் சுமார் 40000 மக்கள் தொகை அதிகரிக்கும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் 13000 வீட்டு வரி விதிப்புகள், 6350 குடிநீர் இணைப்புகள் மற்றும் இதர வரவின வருவாய் இனங்கள் வசூல் செய்யப்பட்டு வருகின்றன. தற்பொழுது நகராட்சி அலுவலகத்தில் போதிய கள பணியாளர்கள் இல்லாமல் பொறியாளர் பிரிவில் கட்டுமான பணிகள்,குடிநீர் விநியோகம் மற்றும் இதர பணிகள் விரைவாக செய்ய இயலாத நிலையில் உள்ளது. மேலும், மாநில மற்றும் மத்திய அரசு திட்டங்களான சாலை, மழை நீர் வடிகால், கட்டிடங்கள் போன்ற பணிகள் கண்காணிக்க பணி ஆய்வர் இல்லாமல் அன்றாட கட்டுமான பணிகளை கவனிக்க முடியாத நிலையில் உள்ளது. கீழ்க்கண்ட இனங்களில் பணி மற்றும் பணியாளர்கள் குறித்த விபரங்கள் வருமாறு.

**<u>தலைமை நீரேற்று நிலையம் :</u>**

இந்நகராட்சிக்கு பவானி ஆற்றிலிருந்து தினசரி 3.63 MLD குடிநீர் எடுக்கப்பட்டு முறையே சுத்திகரிக்கப்பட்டு 39.892 கி.மீ அளவிற்கு பகிர்மான குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் இரண்டு தலைமை நீரேற்று நிலையத்திற்கும் சேர்த்து ஒரு மின் கம்பியாளர் மட்டுமே உள்ளார். இரண்டு நீரேற்று நிலையமும் காலை 4.30 மணி முதல் இரவு 9.30 வரை இயக்கப்பட்டு வருகிறது. இதன் மத்தியில் மின் டிரான்ஸ்பார்மரில் அடிக்கடி மின் தடை ஏற்பட்டு குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. மின் கம்பியாளர் அங்கும் இங்கும் சென்று மின்சார பணிகள் சீர் செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே, இந்நகராட்சி பொறியியல் பிரிவில்

போதிய பணியாளர்கள் இல்லாதால் வெளி ஆட்கள் மூலம் பம்புகள் இயக்க மின் பணியாளர்கள் இரண்டு நபர்கள் தேர்வு செய்ய வேண்டியுள்ளது.

**குழாய் திறப்பாளர்கள்:**

இந்நகராட்சியில் 39.892 கி.மீ அளவிற்கு பகிர்மான குழாய்கள் மூலம் உரிய கேட்வால்வுகள் வழியாக வீதிகளுக்கும், தனியார் குடிநீர் இணைப்புகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொது குழாய் 64, தனியார் குடிநீர் குழாய் இணைப்புகள்-6350 எண்ணிக்கைகள் உள்ளன. ஆனால் குழாய் திறக்கும் பணியாளர்கள் 4 பேர் உள்ளனர். மேலும் சனவரி-23ல் மற்றும் ஜுன்-23ல் இரண்டு பணியாளர்கள் ஓய்வு பெற உள்ளனர். ஒரு நபர் மட்டும் 5 (ஐந்து) வார்டுகளுக்கு காலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை குடிநீர் விநியோக பணி செய்யப்பட்டு வருகிறது. பணிபுரியும் பணியாளர்கள் ஓய்வின்றி பணிபுரிந்து வருகிறார்கள். இதனால் பல இடத்தில் குடிநீர் விநியோக பிரச்சனைகள் ஏற்பட்டு வருகிறது. இதனை சமாளிக்கும் பொருட்டு கூடுதலாக 2 (இரண்டு) குழாய் திறக்கும் பணிக்கு வெளி ஆட்கள் மூலம் தேர்வு செய்ய வேண்டியுள்ளது.

**மீட்டர் ரீட்டிங் கணிணியில் பதிவு செய்தல்:**

இந்நகராட்சியில் தற்பொழுது 6221 தனியார் குடிநீர் இணைப்புகள் உள்ளன. குடிநீர் இணைப்புகள் மூலம் நகராட்சிக்கு குடிநீர் கட்டண கேட்பு தொகை ரூ.87.50 இலட்சம் வசூலிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு இணைப்பு நேரடியாக சென்று குடிநீர் மீட்டரில் அளவீடு செய்து நகராட்சி நிர்வாக ஆணையரக மென்பொருளில் CFC இல் 4 (நான்கு) காலாண்டிற்கு பதியப்பட்டு குடிநீர் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். நடைமுறையில் ஒரு காலாண்டிற்கு 6350 இணைப்புகள், மொத்தம் 4 காலாண்டிற்கு 25,000 பதிவுகள் கணிணியில் ஏற்றம் செய்து குடிநீர் கட்டணம் வசூலிக்க போதிய கால அவகாசம் இல்லை. இதனால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இதனை சமாளிக்கும் பொருட்டு நகராட்சியின் பொறியியல் பிரிவில் போதிய பணியாளர்கள் இல்லை. மேலும் மீடடர் ரீடர் பணியாளர் ஒருவர் ஓய்வு பெற உள்ளார் அதனை கருத்தில் கொண்டு கணிணியில் மீட்டர் ரீட்டிங் பதிவு செய்யும் பணிக்கு ஒரு நபர் வெளி ஆட்கள் மூலம் தேர்வு செய்ய வேண்டியுள்ளது.

**தொழில் நுட்ப உதவியாளர்கள் :**

இந்நகராட்சி 2016-17 முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை மாநில மற்றும் மத்திய அரசால் சாலை,மழைநீர் வடிகால்,கட்டுமானம் மற்றும் உட்கட்டமைப்பு பணிகளுக்கு அதிகளவில் திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு நடைபெற்று கொண்டு வருகின்றன. ஒவ்வொரு திட்டத்திற்கும் தலைமை பொறியாளர் சென்னை அவர்களை நேரில் சென்று சுமார் 7 முதல் 10 நாட்கள் அங்கேயே தங்கியிருந்து தொழில் நுட்ப அங்கீகாரம்,பணி முன்னேற்றம், பணி முடிவுறிக்கை போன்றவைகள் ஒப்புதல் பெறுவது அவசியம் ஆகும். ஆனால்,இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பொதுப்பணி மேற்பார்வையாளர் பணியிடம் மட்டும் உள்ளது. தினசரி கள ஆய்வு மேற்கொள்ளப்படவும், குடிநீர் பிரச்சனைகள் சமாளிக்கவும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு உரிய அறிக்கைகள் அனுப்பவும் மற்றும் அத்தியாவசிய பணிகளும் பார்க்கப்பட வேண்டும். ஒரு பணியாளர் கொண்டு இத்தனை பணிகள் பார்ப்பது மிகவும் கடினமாக உள்ளது. கூடுதலாக பொறியாளர்கள் இருந்தால் அனைத்து பணிகளும் பிரித்து விரைவாக செயல்படுத்த முடியும். பொதுமக்களுக்கும் அவ்வபோது ஏற்படும் குடிநீர் விநியோகம்,வடிகால்,சாலை மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு குறித்த பிரச்சனைகள் தீர்க்க இவ்வாண்டு ஓய்வுபெறும் மின்கம்ப உதவியாளர் பணிக்கு மின்கம்பி உதவியாளர் 1 (ஒன்று) மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் 1 (ஒன்று) நபர்கள் வெளி ஆட்கள் மூலம் தேர்வு செய்ய வேண்டியுள்ளது.

**மின் பணியாளர்:**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட ரங்கசமுத்திரம் மற்றும் கோம்புபள்ளம் தலைமை நீரேற்று நிலையத்தில ஆற்று நீர் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழியே 20 கு.தி.,50 கு.தி.,35கு.தி, திறன் கொண்ட மின் மோட்டார்கள் இயக்கப்பட்டு வருகிறது. ஆற்றுபடுகையிலிருந்து சுமார் காலை 4.30 மணி முதல் இரவு 10.00 மணி வரை மின் மோட்டார்கள் இடைவிடாமல்

இயக்கப்பட்டு வருகிறது. இப்பணியினை மின் பணியாளர் மட்டுமே செயல்படுத்த முடியும். இந்நகராட்சிக்கு மின்பணியாளர்கள் பணியிடம் மூன்று ஒதுக்கீடு ஆகும்.

ஆனால் இப்பணிக்கு மின் பணியாளர் ஒருவர் மட்டுமே இருந்துள்ளார்கள்.அவரும் கோபிச்செட்டிபாளையம் நகராட்சிக்கு மாற்றம் செய்யப்பட்டார். எனவே, இருக்கும் பணியாளரை வைத்து கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணியாளர்களுக்கு போதிய ஓய்வின்றி பணிகள் பார்த்து கொண்டு வருகிறார்கள். இதனால் பணியாளர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே,மின் பணியாளர் இரண்டு வெளி ஆட்கள் மூலம் தேர்வு செய்ய வேண்டியுள்ளது.

சுருக்க பட்டியல்

| வ. எண் | பணியிடம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்கள் | தற்போதுள்ள பணியாளர் விபரம் | 2023-ம் ஆண்டில் ஓய்வு பெறுபவர்கள் | தேவைப்படும் பணியாளர் (வெளி ஆட்கள்) |
|---|---|---|---|---|---|
| 1 | குழாய் திறப்பாளர் | 4 | 4 | 2 | 2 நபர்கள் |
| 2 | த.கு.நீ.நி.உதவியாளர் | 2 | 2 | 1 | 1 நபர்கள் |
| 3 | தொழில்நுட்ப உதவியாளர் | | 0 | 0 | 1 நபர் |
| 4 | மின் பணியாளர்(குடிநீர்) | 3 | 0 | 0 | 3 நபர் |
| 5 | மின்கம்பி உதவியாளர் | 1 | 1 | 1 | 1 |
| 6 | பிட்டர் | 2 | 1 | - | 1 |
| | மொத்தம் | 12 | 8 | 4 | **9 நபர்கள்** |

எனவே, மேற்கண்ட பணியாளர்கள் பற்றாகுறையால் தற்பொழுது உள்ள பணியாளர்களுக்கு தொடர்ந்து இரவும் பகலும் பணி செய்ய அதிகளவில் மன உளைச்சல் ஏற்படுகிறது. இவ்வலுவலக மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர்,சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பபட்டதில் இன்னும் உரிய உத்தரவுகள் பெறப்படாத காரணத்தால்,குழாய் திறப்பாளர்கள்- 2 , தலைமை குடிநீரேற்று நிலைய உதவியாளர்-1, மின் கம்பி உதவியாளர் -1 இந்த ஆண்டு ஓய்வு பெறுவதை ஒட்டியும், அம்ருத் திட்டத்தின் கீழ் குடிநீர் மேம்பாடு பணியில் புதிததாக 4 மேல்நிலைத்தொட்டி கட்டப்பட உள்ளதாலும், போதிய குழாய் திறப்பாளர்கள் இல்லாததால் குடிநீர் விநியோக பணி பாதிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியிடம் | தேவைப்படும் பணியாளர் (வெளி ஆட்கள்) |
|---|---|---|
| 1 | குழாய் திறப்பாளர் மற்றும் உதவியாளர்கள் | 7 நபர்கள் |
| 2 | மின் பணியாளர் | 1 நபர் |
| 3 | கணிணி இயக்குநர் | 1 நபர் |
| | | **9 நபர்கள்** |

எனவே, தற்காலிமாக கீழ்கண்ட பணியிடம் வெளி ஆட்கள் (Out Sourcing) மூலம் மூன்று மாதத்திற்கு பணியமர்த்த **ரூ.4.98 இலட்சத்திற்கு** மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு ஏற்கனவே பணிகள் செய்து வரும் M/s.Vino Constructions, Contractor, Bhavani Sagar, ஒப்பந்ததாரர் அவர்களுக்கே பணி காலம் நீட்டிப்பு செய்யவும், அதே ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு பணி மேற்கொள்ளவும், நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்.992/2020/இ1)

**பொருள் எண். 24**

வேலையின் பெயர் Reclamation of existing dump yard located at Sathy-Athani Main Road Compost Yard by removing the legacy waste of (6558.40 cu. m ) through Bio mining process in sathyamangalam Municipality
Estimate Amount: Rs.53.00 Lakhs.

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.19009/2022/SBM-1 நாள்.25.11.2022 இன்படி தூய்மை இந்தியா திட்டம்-2.O 2022-23 இன்கீழ் இந்நகராட்சிக்கு Biomining மூலம் பழைய குப்பைகள் 6558.40 கன.மீட்டர் அளவிற்கு மறுசுழற்சி செய்ய ரூ.53.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு பங்கு 50 சதவீதம்,மாநில அரசு பங்கு 33 சதவீதம்,நகராட்சி பங்கு 17 சதவீதம் என்ற அலகில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், இப்பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல செயற் பொறியாளர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு12.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு M/s.Orient Builders Private Limited, No.21/ A, Yagappa Nagar,Thanjavur Pin 613007 என்ற நிறுவனத்திற்கு 30.01.2023 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது.

ஒப்பந்ததாரர் பணி தொடங்கப்படாமல் உள்ள நிலையில் பலமுறை ஒப்பந்ததாருக்கு அறிவிப்பு கடிதம் அனுப்பபட்டு பணி ஆரம்பிக்கப்படாத நிலையில் 25.07.2023 அன்று பணி ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது. இந்நிலையில் மறு ஒப்பந்தப்புள்ளி 10.08.2023 அன்று கோரப்பட்டது. கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | FINE LINE RENEWABLES, 15, KOLLAN KOIL MAIN ROAD, NORTH STREET, KANDASAMIPALAYAM KOLLANKOIL. |
| 2 | GLOBAL ICON, 15, KANDASAMYPALAYAM NORTH STREET, KOLLANKOIL, ERODE. |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் 10.08.2023 அன்று தொழில்நுட்ப தகுதி ஆராய்ந்ததில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் தகுதி வாய்ந்ததாக உள்ளது.(Technically Responsive) எனவே, மேற்கண்ட ஒப்பந்ததாரர்களுக்கு 11.08.2023 அன்று விலைப்பட்டியல் (Price Bid) திறப்பது குறித்து கடிதம் அனுப்பட்டது. 16.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | FINE LINE RENEWABLES,<br>15 KOLLANKOIL MAIN ROAD,<br>NORTH STREET,<br>KANDASAMIPALAYAM, KOLLANKOIL. | ரூ.46,56,464.00 | 0.41 சதவீதம் குறைவு. |
| 2 | GLOBAL ICON,<br>15, KANDASAMYPALAYAM NORTH STREET, KOLLANKOIL,<br>ERODE | ரூ.46,76,139.00 | 0.01 சதவீதம் அதிகம். |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை வழங்கிய FINE LINE RENEWABLES,15,KOLLANKOIL MAIN ROAD, NORTH STREET, KANDASAMIPALAYAM KOLLANKOIL அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண்.59/ 2019/ இ1)

**பொருள் எண். 25**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.22038/2023/SS -2 நாள்.28.06.2023 இன்படி 6 வது மாநில நிதிக்குழு மானியம்2023-2024 ஆம் ஆண்டிற்கான SFC Arrear Fund தொகையில் சாலைப்பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.2505/2023/பி1 நாள்.03.07.2023 இன்படி கீழ்கண்ட சாலை பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மண்டல செயற் பொறியாளர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், திருப்பூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.2743/2023/பி1 நாள்.03.07.2023 இன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடித ந.க.எண்.2505/2023/பி1 நாள்.03.7.2023 இன்படி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி 14.07.2023 அன்று மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மாநில அளவில் ஒப்பந்தப்புள்ளி கோர ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு Deccan Chronicleand Hindu Tamil தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. இதற்கு பட்டியல் தொகை ரூ.77018 /- ஐ வழங்குமாறு Sudha Arts நிறுவனத்தினர் வழங்க கேட்டுள்ளனர், மேற்படி தொகை வழங்கவும், இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கப்படுகிறது.

(ந..க.எண். 1315/2023/இ1)

**பொருள் எண். 26**

வருவாய் வட்டாட்சியர், சத்தியமங்கலம் அவர்களின் கடிதம் ந.க.எண். 4562/2023/ஆ2 நாள். 20.07.2023 இன்படி இந்நகராட்சிப்பகுதியில் கலைஞர் மகளிர் உரிமை திட்டம், மனுக்கள் பெறும் முகாமிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அறைகளை கிராம நிர்வாக அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொண்டதில் தேவையான அடிப்படை வசதிகள் போதுமானதாக இல்லை. மேற்படி முகாம்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தருமாறு தெரித்துள்ளார். எனவே, இத்திட்டம் செயல்படுத்தும் பொருட்டு அடிப்படை வசதிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பபடுகிறது.

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) இந்நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி தொடங்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கட்டு எண்.1539/2023/இ1)

**பொருள் எண். 27**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதியில் மொத்த 26 சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் 2 பொதுக்கழிப்பிடங்கள் உள்ளன. இந்த கழிப்பிடங்கள் கட்டப்பட்டு பல வருடங்களுக்கு மேலாகி விட்டது. இந்த கழிப்பிடங்களில் அவ்வப்போது சிறு பழுதுகள் ஏற்பட்டு சுகாதார கேடு ஏற்பட்டு வருகிறது. இக்கழிப்பிடங்களில் உள்ள கதவுகள், ஜன்னல், பேசின் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுவது அவசியம் ஆகும். இந்த பராமரிப்பு பணிகள் தனி தனியாக மேற்கொள்ளுவது சாத்தியக்கூறுகள் இல்லை. எனவே, இந்நகராட்சி பகுதியில் உள்ள 28 கழிப்பிடங்களிலும் பராமரிப்பு பணிகள் உடனுக்குடன் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண். 548/2022/இ1)

**பொருள் எண். 28**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.5 குள்ளங்கரடு பகுதியில் போதிய குடிநீர் வசதிகள் இல்லாததால் பொதுமக்கன் மிகவும் அவதிப்படுகிறார்கள். பொதுமக்களின் நலன் கருதியும் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் பொருட்டு

ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றிலிருந்து குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டால் குடிநீர் தட்டுப்பாடு தீர்க்க முடியும் என்று நகர் மன்ற உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள். எனவே, போர்கால அடிப்படையில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணி மேற்கொள்ளும் பொருட்டு உத்தேச செலவினம் ரூ.70,000/- ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கட்டு எண். 548/2022/இ1)

## பொருள் எண். 29

சத்தியமங்கலம் நகராட்சியில் 2023- 2024 ஆம் ஆண்டு வருவாய் நிதி திட்டத்தின் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு கடந்த 16.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளன.

1) வேலையின் பெயர் - சத்தியமங்கலம் நகராட்சியில் நகரமைப்பு பிரிவு அமைப்பதற்கு தடுப்பு அமைத்து சிறப்பு ஏற்பாடுகள் செய்தல்

மதிப்பீடு தொகை- ரூ.4.00 இலட்சம்

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1. | திரு.ஆர்.ஆறுமுகம்,<br>ஒப்பந்ததாரர்,<br>சத்தியமங்கலம். | ரூ.3,28,640/- | 0.12 சதவீத குறைவு. |
| 2. | மெர்ஸ். வினோ கன்ஸ்ட்ரக்சன்ஸ்,<br>ஒப்பந்ததாரர்,<br>சத்தியமங்கலம். | ரூ.3,39,040/- | 1.80 சதவீத அதிகம். |

2) வேலையின் பெயர் - சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.3 முல்லை நகர் பகுதியில் வடிகால் அமைத்தல்

மதிப்பீடு தொகை- ரூ.3.00 இலட்சம்

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1. | திரு.ஆர்.ஆறுமுகம்,<br>ஒப்பந்ததாரர்,<br>சத்தியமங்கலம். | ரூ.2,49,151/- | 0.17 சதவீத குறைவு. |
| 2. | மெர்ஸ். வினோ கன்ஸ்ட்ரக்சன்ஸ்,<br>ஒப்பந்ததாரர்,<br>சத்தியமங்கலம். | ரூ.2,53,249/- | 1.46 சதவீத அதிகம். |

3) வேலையின் பெயர் - சத்தியமங்கலம் நகராட்சி காலை சிற்றுண்டி வளாகத்தில் கூடுதல் வசதிகள் செய்தல்

மதிப்பீடு தொகை - ரூ.3.50 இலட்சம்

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1. | மெர்ஸ். வினோ கன்ஸ்ட்ரக்சன்ஸ்,<br>ஒப்பந்ததாரர்,<br>சத்தியமங்கலம். | ரூ.2,90,185/- | 0.13 சதவீத குறைவு. |
| 2. | திரு.ஆர்.ஆறுமுகம்,<br>ஒப்பந்ததாரர்,<br>சத்தியமங்கலம். | ரூ.2,94,118/- | 1.22 சதவீத அதிகம். |

4) வேலையின் பெயர் - சத்தியமங்கலம் நகராட்சியில் ஆணையாளர் குடியிருப்பில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் செய்தல்

மதிப்பீடு தொகை - ரூ.5.00 இலட்சம்

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1. | மெர்ஸ். வினோ கன்ஸ்ட்ரக்சன்ஸ்<br>ஒப்பந்ததாரர்,<br>சத்தியமங்கலம். | ரூ.4,17,539/- | 0.07 சதவீத குறைவு. |
| 2. | திரு.ஆர்.ஆறுமுகம்,<br>ஒப்பந்ததாரர்,<br>சத்தியமங்கலம். | ரூ.4,18,406/- | 0.12 சதவீத அதிகம். |

5) வேலையின் பெயர் - சத்தியமங்கலம் நகராட்சி அண்ணா நகர் சமுதாய கழிப்பிடத்தில் Grill Works, Elevation Works மேற்கொள்ளுதல்.

மதிப்பீடு தொகை - ரூ.2.00 இலட்சம்

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1. | மெர்ஸ்.வினோ கன்ஸ்ட்ரக்சன்ஸ்,<br>ஒப்பந்ததாரர்,<br>சத்தியமங்கலம். | ரூ.1,63,752/- | 0.12 சதவீத குறைவு. |
| 2. | திரு.ஆர்.ஆறுமுகம்,<br>ஒப்பந்ததாரர்,<br>சத்தியமங்கலம். | ரூ.1,70,225/- | 3.80 சதவீத அதிகம். |

மேற்கண்ட அட்டவணையின் படி வ.எண். 1 மற்றும் 2 மட்டும் உள்ள பணிகள் திரு.ஆர்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம், வ.எண். 3 முதல் 5 வரை உள்ள பணிகள் மெர்ஸ். வினோ கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர், சத்தியமங்கலம் ஆகிய ஒப்பந்ததாரர்கள் தனது ஒப்பந்தப்புள்ளி தொகை குறைவாக வழங்கி உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி ஏற்றமைக்கும் பணி ஆணை வழங்கப்பட்டமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கட்டு எண்.548/2022/இ1)

**பொருள் எண். 30**

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு நுண் உயிரி மையம்-2 (Micro Compost Centre), வளம் மீட்பு மையம் (Resource Recovery Centre) - 2 , குப்பை பிரிக்கும் தளம் ( Presorting Shed) ஆகிய இடங்களில் உள்ள இயந்திரங்கள் (Shredder machine, Bailing Machine) மற்றும் இதரவைகள், மற்றும் கட்டிட பராமரிப்பு பணிகள் அவ்வப்போது பழுது ஏற்பட்டு வருகிறது. இதனை உடனுக்குடன் பழுது சரி செய்ய வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்டு வரும் கட்டுமானம் மற்றும் இயந்திரம் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்.548/2022/இ1)

**பொருள் எண். 31**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட திப்புசுல்தான் ரோட்டில் அமைந்துள்ள சுந்தர் மஹால் திருமண மண்டபத்திற்கு அருகில் உள்ள மழை நீர் வடிகால் பழுதடைந்துள்ளதால் மண்டபத்திலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் ஆங்காங்கே தேங்கி நின்று வருகிறது. இதனால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி பொதுமக்கள் புகார் தெரிவித்து வந்துள்ளார்கள். எனவே, சுந்தர் மஹாலுக்கு கிழக்கே தடுப்பு சுவர் அமைக்க உத்தேச செலவினம் ரூ.8.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்.548/2022/இ1)

**பொருள் எண். 32**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண். 11 ராஜீவ் நகர் சிவா மெடிக்கல்ஸ் கடையிலிருந்து கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் வரை ஏற்கனவே உள்ள

வடிகால் கட்டமைப்பு பழுது ஏற்பட்டுள்ளது. இதனால் மழைநீர் சீராக செல்ல முடியாமல் உள்ளது. மேலும், மழைநீர் சீராக சென்று பிரதான வடிகாலில் சேர்க்கும் வகையில் மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால் அமைப்பது அவசியம் ஆகும். இந்த பகுதியில் மழைநீர் வடிகால் பழுது ஏற்பட்டு மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி நின்று சுகாதார கேடு ஏற்பட்டு வருகிறது, மழைநீர் வடிகால் அமைத்துத் தரக்கோரி நகர் மன்ற உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. எனவே அவசர அவசியம் கருதியும் மழைநீர் வடிகால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்.548/2022/இ1)

**பொருள் எண். 33**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.1382/2023/பி1நாள்.20.05.2023 இன்படி சத்தியமங்கலம் நகராட்சிக்கு 2022-2023 ஆம் ஆண்டு 15 வது நிதிக்குழு மானியம் (Tied Grant) திட்டத்தின் கீழ் Construction of Bio Menthanation Plant at Compost Yard in Sathyamangalam Municipality பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மண்டல செயற் பொறியாளர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 06.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு எவரும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படாததால் மீண்டும் 04.08.2023 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | M/s. Sundaram Fab Private Limited, 5/174 Thiruchengodu Main Road, Rasipuram Taluk, Andagalore, Namakkal |
| 2 | Arumugam Arivu Bio Energy, 42, Gandhi Nagar 1 St Street, Veerappanagar, Valasaravakkam, Chennai. |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டது.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.Sundaram Fab Private Limited 5/174 Thiruchengodu Main Road, Rasipuram Taluk,Andagalore, Namakkal | ரூ.29,98,500/- | 19.18 சதவீதம் அதிகம். |
| 2 | Arumugam Arivu Bio Energy ,42, Gandhi Nagar, 1 St Street, Veerappanagar ,Valasaravakkam, Chennai. | ரூ.29,99,500/- | 19.22 சதவீதம் அதிகம். |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு தொகைக்கு அதிகமாக வழங்கியதை தொடர்ந்து, இரண்டு ஒப்பந்ததாரர்களில் குறைவான ஒப்பந்தப்புள்ளி தொகை வழங்கிய M/s.Sundaram Fab Private Limited, 5/174, Thiruchengodu Main Road, Rasipuram Taluk, Andagalore, Namakkal அவர்களுக்கு விலைக்குறைப்பு செய்து தரக்கோரி கடிதம் அனுப்பபட்டது. அதற்கு மேற்கண்ட ஒப்பந்ததாரர் தனது ஒப்பந்தப்புள்ளி சதவீதத்தை குறைத்து 0.01 சதவீதம் மதிப்பீட்டை விட குறைவாக பணிகள் செய்வதாக தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள்.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.Sundaram Fab Private Limited, 5/174, Thiruchengodu Main Road, Rasipuram Taluk,Andagalore, Namakkal, Tamilnadu, India -637401 | ரூ.25,15,748.40/- | மதிப்பீட்டை விட 0.01 சதவீதம் குறைவு. |

எனவே, இதனை தொடர்ந்து மேற்கண்ட பணியினை தொடங்க பணி ஆணை வழங்கப்பட்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பபடுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கட்டு எண்.1770/2021/இ1)

**பொருள் எண்.34**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண். 6, 7, 21, 22 ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகம் பற்றாக்குறையாக உள்ளதாகவும், குழாய் விஸ்தரிப்பு செய்து பொதுமக்கள் அனைவருக்கும் குடிநீர் கிடைக்கும் வகையில் எற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றிலிருந்து குழாய் விஸ்தரிப்பு செய்து தர வேண்டும் என நகர் மன்ற உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. எனவே, போர்கால அடிப்படையில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணி மேற்கொள்ளுவது அவசியம் ஆகும். எனவே, மேற்கண்ட வார்டுகளில் ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றிலிருந்து குழாய் விஸ்தரிப்பு பணி செய்ய உத்தேச செலவினம் ரூ.4.50 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்.548/2022/இ1)

**பொருள் எண். 35**

நில வருவாய் ஆய்வாளர், சத்தியமங்கலம் உள்வட்டம், சத்தியமங்கலம் வட்டம் அவர்களின் கடிதம் நாள்: 14.08.2023 இல் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் , சத்தியமங்கலம் கிராமம், புதிய ரீ.ச.எண்.308/1 இல் தற்கால நகர அளவை எண்- வார்டு- D, பிளாக்-1, நகர அளவை எண் -8/1 இல் பு.ஹெ.1.25.72 பரப்பளவுள்ள கரடு புறம்போக்கு மற்றும் சத்தியமங்கலம் கிராமம் ரீ.ச.140/2, தற்கால நகரளவை வார்டு –C, பிளாக் -8, நகர அளவை எண் -13/2 -இல் பு.ஹெ.7.65.5 கரடு புறம்போக்கில் பு.ஹெ.2.50.0 பரப்பளவுள்ள இடத்தில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவதற்கு தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் , இந்நேர்வில் இந்நகராட்சியின் தீர்மானம் நிறைவேற்றி 15 தினங்களுக்குள் அனுப்பி வைக்க கோரியுள்ளார். இதனடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டதில் நகரசார் ஆய்வாளரின் 17.08.2023 - ம் தேதிய குறிப்பு மற்றும் T.S.L.R.-ன்படி நகரளவு வார்டு – C, பிளாக் -8, நகர அளவை எண் -13/2 ஆனது நகரளவு நிலப்பதிவேட்டின்படி சர்க்கார் தீர்வை ஏற்படாத தரிசு என்ற வகைப்பாட்டிலும், குறிப்பில் கரடு எனவும் மற்றும் நகரளவு வார்டு- D, பிளாக்-1, நகர அளவை எண் -8/1 ஆனது, சர்க்கார் தீர்வை ஏற்பட்ட தரிசு எனவும், குறிப்பில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் என உள்ளது. ஆகவே, மேற்கண்ட இடம் நகராட்சிக்கு சொந்தமானது இல்லை என்பதால் இவ்விரு இடங்களில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்ட நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நிலஉரிமை மாற்றம் செய்ய இந்நகராட்சிக்கு ஆட்சேபனை இல்லை என தெரிவிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1737/2023/எப் 1)

**பொருள் எண். 36**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 1622/2022/பி1 நாள்: 27.07.2023 கடிதத்தின்படி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண். 20789/2021/UPA நாள்: 08.11.2022 கடிதத்தில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (Day – NULM) 2022-2023 ன் கீழ் தகுதியுள்ள சாலையோர வியாபாரிகளுக்கு விற்பனை வண்டிகள் (Vending Cart) சத்தியமங்கலம் நகராட்சிக்கு கீழ்க்கண்டவாறு,

| | | |
|---|---|---|
| Fruits & Vegetables Cart | - | 3 |
| Food Items Carts | - | 10 |
| Flowers Cart | - | 3 |
| | | 16 |

16 எண்ணிக்கையிலான வண்டிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி PMSvanidhi திட்டத்தின் கீழ் 3ம் கட்ட கடனுதவி பெற்ற 6 நபர்களில் Food Items Cart-3 நபர்களுக்கும், Fruits & Vegetables -1 நபருக்கும், மீதமுள்ள 12வண்டிகளில் இரண்டாம் கட்ட கடனுதவி பெற்று தகுதி வாய்ந்த பயனாளிகளில் முன்னுரிமை அடிப்படையில் மன்றத்தின் மூலம் தேர்வு செய்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

முன்னுரிமை அடிப்படையில் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2731/2019/எப் 1)

**பொருள் எண். 37**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட திப்புசுல்தான் ரோடு, சத்தியா தியேட்டர் ரோடு மற்றும் இதர பகுதியில் உள்ள பிரதான மழை நீர் வடிகாலில் தேங்கியிருக்கும் மண்ணினால் மழைநீர் அடைப்பட்டு மழைநீர் சாலையில் குடியிருப்புகளுக்குள் செல்கிறது. இதனால் அதிக அளவில் நோய் தொற்று ஏற்பட்டு வருகிறது. இதனை தடுக்கும் பொருட்டு முறையான நீர் மேலாண்மை மேற்கொள்ள எதிர்வரும் மழைகாலங்களில் மழைநீர் சீரான முறையில் செல்லும் வகையில் பிரதான வடிகாலில் உள்ள மண் அடைப்பு சுத்தம் செய்யப்பட வேண்டியது அவசியம் ஆகும். இப்பணிக்கு உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்.548/2022/இ1)

**பொருள் எண். 38**

ஈரோடு மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அவர்களின் கடித ந.க.எண்.3955/2020/அ6 நாள்.15.05.2023 மற்றும வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் கடித ந.க.எண். 389/2021/ஆ3 நாள். 17.05.2023 இல் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) பகுதி -II 2023-2024 கழிவுநீர் சுத்திகரிப்பு திட்டம் கிராம ஊராட்சிகளை ஏற்கனவே நகராட்சி பகுதியில் உள்ள STP (Sewerage Treatment Plant) மையங்களுடன் இணைத்தல் சம்மந்தமாக 13 ஊராட்சிகளில் இருந்து வெளியேற்றப்படும் மலக்கசடு (Septage Management) இந்நகராட்சியின் கோட்டுவீராம்பாளையம் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிப்பு செய்ய புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் பணிகளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 11.08.2023 தேதிய மாவட்ட அளவிலான உயர்மட்ட ஆய்வு குழு கூட்ட அறிவுரையின்படி சத்தியமங்கலம் மற்றும் தாளவாடி வட்டாரங்களில் உள்ள கிராம ஊராட்சிகளிலிருந்து வெளியேற்றப்படும் மலக்கசடு மேலாண்மை செய்ய இந்நகராட்சியில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் மறுசுழற்ச்சி செய்யுமாறு தெரிவித்துள்ளார்கள். எனவே, மேற்கண்ட திட்டம் செயல்படுத்த வரப்பெற்றுள்ள (MOU) புரிந்துணர்வு ஒப்பந்தம் நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண். 920/1100/2023/இ1)

**பொருள் எண். 39**

சத்தியமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட நகராட்சி குப்பை கிடங்கில் உள்ள Incinerator Plant இயக்க தமிழ்நாடு மாசுகட்டுபாட்டு வாரியத்தில் CTO விண்ணப்பிக்கப்பட்டதில் மேற்கண்ட பிளாண்டில் ETP அமைக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்கள். மேலும், இந்நகராட்சி பகுதியில் உள்ள நுண் உயிரி மையம், வளம் மீட்பு மையம், மற்றும் விண்ரோஸ் பிளாண்ட் ஆகியவைகள் தமிழ்நாடு மாசுகட்டுபாட்டு வாரியத்தில் CTO renewal பணி செய்ய மற்றும் கட்டணம் செலுத்த உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம் (கட்டு எண்.548/2022/இ1)

**பொருள் எண். 40**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட வார்டு எண்.16 பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் அமைத்து பல வருடங்களுக்கு மேலாகி விட்டது. இந்த வடிகாலில் சிறு பழுதுகள் ஏற்பட்டு கழிவுநீர் வடிகால் கட்டமைப்பிலிருந்து கழிவு நீர் கசிந்து வெளியேறி சாலையில் செல்கிறது. இதனால் கழிவுநீரால் அதிகளவில் துர்நாற்றம் வீசுகிறது. மேலும், கழிவுநீரில் கொசுக்கள், புழுக்கள் உற்பத்தியாகி நோய் பரவ வாய்ப்பு உள்ளதாக நகர் மன்ற உறுப்பினர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. எனவே, அவசர அவசியம் கருதி மழைநீர் வடிகால் சிறப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.3.80 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண். 548/2022/இ1)

**பொருள் எண். 41**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் உள்ள உயர் மின் கோபுரத்தில் உள்ள சோடியம் மற்றும் மெர்குரி பல்புகளை எல்.இ.டி லைட்டுகளாக மாற்றவும் மற்றும் உயர் மின் கோபுரம் தூண் பழுது ஏற்பட்டு சாய்ந்த நிலையில் உள்ளது. இதனை சரி செய்ய உத்தேச செலவினம் ரூ.1.60 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம் (கட்டு எண்.548/2022/இ1)

**பொருள் எண். 42**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் ந.க.எண். 17404/2022/எம்.1 நாள்.22.08.2023 இன்படி முதலமைச்சர் காலை உணவு திட்டம் 1 முதல் 5 வகுப்பு வரை உள்ள பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு சாப்பிடுவதற்கு தேவையான பிளேட் மற்றும் டம்ளர் நகராட்சி நிதியில் வாங்கி கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. எனவே, இத்திட்டம் செயல்படுத்தும் பொருட்டு இந்நகராட்சி பகுதியில் உள்ள ஐந்து பள்ளிகளில் மொத்தம் 565 குழுந்தைகள் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.இந்த குழந்தைகளுக்கு சாப்பிடுவதற்கு 565 பிளேட் மற்றும் டம்ளர் வாங்க உத்தேச செலவினம் ரூ.1.13 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ளவும், இப்பணியின் முக்கியத்துவம் கருதி விலைப்புள்ளி கோரப்பட்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(கட்டு எண்.461/2023/இ1)

**பொருள் எண். 43**

சத்தியமங்கலம் நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்ட வரும் குடிநீர் டேங்கர் லாரி TN 36 AZ8821 வாகனத்தின் டயர்கள் தேய்ந்து வெடிக்கும் நிலையில் உள்ளது. இதனால் வாகனம் இயக்க இயலாத நிலையில் உள்ளது. இந்த வாகனத்திற்கு புதிய டயர்கள், பேட்டரி, மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று திரு.எஸ்.கே.பழனிசாமி ஓட்டுநர் அவர்களின் விண்ணபத்தில் தெரிவிக்கப்பட்டது. இப்பொருள் மீது சிறப்பு கவனம் செலுத்தும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஸ்ரீ பாக்கியலட்சுமி மோட்டார் ஓர்க்ஸ்

ஈரோடு நிறுவனத்தில் வாகனம் பழுது பார்க்க வகையில் உத்தேச செலவினம் ரூ.1.10 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(கட்டு எண்.1336/2023/இ1)

**பொருள் எண். 44**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட கட்டபொம்மன் நகரில் அமைந்துள்ள முதலமைச்சர் காலை உணவு திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த சமையற்கூட வளாகத்தில் கேஸ் பைப்லைன், கொசு வலை, தீயணைப்பு சாதனங்கள், ஸ்டீல் ரேக், ACP Material Sticker, Foam Board, Square Frames போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பணிகள் மூல மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படவில்லை. எனவே, அவசர அவசியம் கருதி இப்பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.3.90 இலட்சம் ஆகும். இச்செலவினம் நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும், இப்பணியின் முக்கியத்துவம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டமைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்

(கட்டு எண்.431/2023/இ1)

இடம்: சத்தியமங்கலம்

நாள் : 24.08.2023